செ.வெ.எண்:42 நாள்:12.08.2017

# பத்திரிக்கை செய்தி

## திறந்த வெளி மலம் கழித்தலற்ற வாரம் கொண்டாட்டம்
## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கலை பண்பாட்டுப் போட்டிகள்

திருநெல்வேலி மாவட்ட நிர்வாகம் சார்பில் மாவட்டத்தில் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லா மாவட்டமாக உருவாக்கிட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மத்தியில் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல் மற்றும் பயன்பாடு நூறு சதவீதம் ஏற்படுத்தும் வகையில் தூய்மை இந்தியா என்ற தலைப்பில் பாளையங்கோட்டை வட்டார அளவிலான கலை பண்பாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்கள் கலந்து கொண்டு போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார்கள். கோலப்போட்டியில் முதற்பரிசு ஈஸ்வரி மகளிர் சுய உதவிக் குழுவிற்கும் இரண்டாம் பரிசு ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவிற்கும் மூன்றாம் பரிசு அகல்யா மகளிர் சுய உதவிக் குழுவிற்கும் வழங்கப்பட்டது. பாட்டுப் போட்டியில் மல்லிகை மகளிர் சுய உதவிக் குழு முதற்பரிசும் ஜீவன் கிராமோதயா மகளிர் சுய உதவிக் குழு இரண்டாம் பரிசும் மலர் மகளிர் சுய உதவிக் குழு மூன்றாம் பரிசையும் தட்டிச் சென்றன. மேலும் பேச்சுப் போட்டியில் முதற்பரிசு தாமிரபரணி மகளிர் சுய உதவிக் குழுவும் (அண்ணாநகர்) இரண்டாம் பரிசு மலர் மகளிர் சுய உதவிக் குழுவும் மூன்றாம் பரிசு தாமிரபரணி மகளிர் சுய உதவிக் குழுவும் பெற்றன. மேற்படி போட்டிகளுக்கு கவிஞர் திரு.கோ.கணபதி சுப்பிரமணியம், திரு.ஜெ.தேவபிச்சை மற்றும் திரு.கே.பி.அருணாசிவாஜி நடுவர்களாக முன்நின்று நடத்தினர். இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் திருமதி.த.கெட்ஸி லீமா அமலினி அவர்கள் நிகழ்ச்சிகளை வழிநடத்தினார்கள்.இந்நிகழ்ச்சியில் திரளாக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், களப்பகுதி பணியாளர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இணை இயக்குநர்/திட்ட இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,
திருநெல்வேலி மாவட்டம்

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி